# ஆத்ம ஜோதி




பகவான் அரவிந்தர்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

சோதி 8 | துர்முகி௵ ஆவணிமீ 1-ந்உ (16-8-56) | சுடர் 10


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | பாரதசக்தி திகழுக | 289 |
| 2 | மனத்திற்கு ஓர் விண்ணப்பம் | 290 |
| 3 | தீர்க்கதரிசியின் திருநாள் | 291 |
| 4 | அவ்வியம் பேசேல் | 294 |
| 5 | அரவிந்தயோகம் | 296 |
| 6 | யோகமணி விளக்கு | 297 |
| 7 | திவ்விய ஜீவன சங்கக்கிளை | 298 |
| 8 | தேவமனிதர் | 300 |
| 9 | யோக ஆசனங்கள் | 301 |
| 10 | ஸ்ரீ கதிரைமணி மாலை | 308 |
| 11 | நடராஜ தத்துவம் | 310 |
| 12 | நானும் எனது குருநாதரும் | 313 |
| 13 | திருமுறைக் காட்சி | 315 |
| 14 | அகில உலகத் தமிழ்க்கலை மன்றம் | 320 |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:– நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]




# பாரத சக்தி திகழுக!

(யோகி சுத்தானந்த பாரதியார்)

எத்திசை யுலகும் இனிதெனக் கொள்ளும்
இயல்புறு நிலையினை விளக்கிச்
சுத்தசன் மார்க்க விளக்கினைத் தூண்டித்
தொண்டறி வன்பினைத் துலக்கிச்
சத்தியத் துடுப்பால் வாழ்வெனும் படகைச்
சதானந்த வெள்ளத்திற் செலுத்தி,
நித்திய மான பயனளித் தெனது
நிறைகவி நிலவிட வருளாய் !

ஓங்கிய தெய்வச் சுவையிலே தோய்ந்திவ்
வுலகினில் அமரவாழ் வெய்தித்
தீங்கலை வளமை திசைதிசை பெருகிச்
செவ்விய நன்னடை. செழிக்க,
நீங்கறு சுடராய் என்னுளே நிலவு
நிமலனே நீதரும் இந்தத்
தேங்கவி யான பாரத சக்தி
திகழுக புகழுறச் சிறந்தே !

சித்தரின் உள்ளே தியானத்தில் வந்து
தித்திக்கும் சிவமயப் பொருளே,
சுத்தசன் மார்க்கச் சுடரொளிக் குன்றே,
சுத்தனும் சக்தியுந் துலங்கி,
இத்தல மெல்லாம் அருளர சாட்சி
இலக்கிய கதையினை யிசைக்க
வித்தகர் போற்றும் வேதவாக் கருளாய்
வெற்றியை விளக்கிடும் இறைவா !

# மனத்திற்கு ஓர் விண்ணப்பம்.

மனதே !

காளிகாதேவி கற்பக விருக்ஷமாக எழுந்தருளி யிருக்கின்ருள் அந்தத் தருவின் நிழலே நாடிப் போவோம் வா. அந்த மரத் தடியில் போய்ச் சேர்ந்தால் நமக்கு அறம், பொருள், இன் பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் கிடைக்கின்றன.

மனதே !

வைராக்கியம் என்றும் உலகவிகாரம் என்றும் உனக்கு இர ண்டு வாழ்க்கைத் துணைகள் இருக்கின்றன. அவைகளுள் வைராக்கியத்தை மட்டும் அழைத்துவா,

மனதே !

அந்த வைராக்கியத்துக்கு மகவாக வாய்த்தது விவேகம். அன்னை காளிகாதேவியைப் பற்றிய முடிவான உண்மை யாது என்பதை அந்த விவேகத்தினிடம் கேட்டுப்பார்.

மனதே !

இப்பொழுது நீ சுத்தம் அசுத்தம் என்பவைகளுக்கிடையே உழல்கின்ருய். இவைகளைக் கடந்து பேரானந்தப் பிராப் தியில் நீ நிலைபெற்றிருக்கும் நாள் எந்நாள்?

மனதே !

வைராக்கியம் என்னும் மனைவி வசித்திருக்கும் வீட்டில் உலக வியவகாரம் என்னும் மனைவி வசித்திருக்க முடிவதி ல்லை. அவர்களுக்கிடையில் ஓயாத சச்சரவு ஆகையால்

மனதே !

என்றைக்கு உனது இவ்விரு மனைவிகளையும் திருப்தி என் னும் வீட்டில் ஒன்றுகூடி வாழ்ந்திருக்க ஏவுகின்ருயோ அன்றைக்கு அன்னை சியாமாவின் ஒப்பற்ற சொரூபத்தைக் காண நீ வல்லவன் ஆவாய்.

மனதே !

உனது பெற்றோர்களாகிய ஆணவத்தையும் அவித்தையை யும் உன்னிடமிருந்து இப்பொழுதே ஓட்டிவிடு, நலம், கேடு என்னும் இருள்சேர் இருவினைகளையும் நடுநிலை என் னும் கம்பத்தில் கட்டிவைத்துவிடு. அவைகள் துள்ளிக் குதிக்க முயன்ருல், ஞானவாளில் அவைகளை மாய்த்துவிடு.

*[பரமஹம்ஸ தேவர் அடிக்கடி பாடி மகிழும் ராம்பிரசாதரின் வங்கப் பாடலின் சாரம்.]*

# தீர்க்கதரிசியின் திருநாள்.

(ஆசிரியர்)

ஆகஸ்ற் பதினைந்து! பாரதமக்கள் அனைவர்க்கும் பரிசுத்தமான தினம் இது. பாரத பூமி விடுதலையடைந்த திருநாள் இது. மாந்தரெல்லாம் வேந்தராக வாழவேண்டும். மண்ணுலகெங்கும் சாந்தியும், சந்துஷ்டியும், சமாதானமும் நிலவ வேண்டுமென எண்ணுவோரெல்லாம் சாதி நிற, மொழி, சமய வேறுபாடுகளை மறந்து மனம் ஒருமித்துக் கொண்டாடும் புண்ணிய நாள் இது.

பாரத நாட்டின் சுதந்திரம் உதயமானது 1947-ம் ஆண்டில். அதற்கு முன்னரேயே இருபத்தைந்து ஆண்டுகளாக ஆகஸ்ற் மாதம் பதினைந்தாந்தேதி பூரணயோகி அரவிந்தர் அவர்களின் பிறந்ததினமாக அமைந்த காரணத்தால், இவரது அடியார் கூட்டத்தினுல் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இன்றும் கொண்டாடப்படுகிறது. இத்தினம் பாரத தேசத்தின் சரித்திரத்தில் முக்கிய இடம் வகிக்கப்போவதை நன்கு உணர்ந்தே, 1922-ம் ஆண்டு தொடக்கம் அரவிந்தர் உத்தரவு அளித்தனர்.

அரவிந்தரின் வாழ்க்கை வரலாறு "ஆத்மஜோதி"யில் முன்னரேயே விபரமாகத் தரப்பட்டுள்ளது. எனவே, மேலும் விளக்க வேண்டிய அவசியமில்லை. சில முக்கிய குறிப்புகளை மாத்திரம் இங்கு தர விரும்புகின்றோம். அவரின் மகிமையை நேரத்துடன் அறிந்த மகான்கள் பலருளர். அவர்களுள் இராமலிங்கசுவாமிகள் முதலிடம் பெறுகின்றார். அரவிந்தர் பிறப்பதற்கு முன்னரேயே "உத்தரயோகி ஒருவர் தென்னாடு சேர்வார். அவர்வாக்கு உலகெங்கும் பரவும்" என அந்த மகாத்மா திருவாய்மலர்ந்தனர். இரண்டாம் இடம் கொட்டியாரம் ஜெமின்தார் அரங்கசாமியின்குருவான யோகி நாகை ஜப்தா அவர்கட்கு உரியதாகும். உத்தரயோகி தமிழ்நாடு வரப்போவதையும் அவருக்குரிய குணவிசேடங்களையும் தமது சீடனுக்கு அறிவித்துவிட்டு அப்பெரியார் சமாதியடைந்தனர். அரவிந்தருடன் நெருங்கிப் பழகியபின் அவரின் எதிர்காலச் சிறப்பை உணர்ந்தவர்களும் பலருளர். அக்கூட்டத்தில், பாலகங்காதர திலகர், வங்க கவிதாகூர், சித்தரஞ்ஜன தாஸர், போல் றிச்சேட், திருமதி மீரா றிச்சேட் முதலியவர்களைச் சேர்க்கலாம். இவர்களின்

பழைய டாராட்டு மொழிகளில், அரவிந்தரின் பிற்கால வாழ்வின் மகிமை மிகவும் அற்புதமாக அமைந்திருப்பதைக் காணலாம். சந்திர நாகூரிலிருந்து கல்கத்தா வழியாக கப்பல் மார்க்கம் தென்னாடு சேர்ந்த உத்தரயோகியை புதுவைத்துறைமுகத்தில், 1910-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் நாலாந் தேதியன்று ஆர்வத்துடன் வரவேற்று அணைத்துக் கொண்ட பெருமை கவிக்குயில் சுப்பிரமணிய பாரதியாரைச் சேர்ந்ததாகும். தியாகியான யோகியை தமிழ் நாட்டு மண்ணில் வரவேற்க, வீரத்தியாகியான ஆவேசக்கவியான பாரதியைக் கூட்டிவைத்த திருவருளின் சிறப்பை எந்தத்தமிழன் தான் நன்றியுடன் பாராட்டாமல் இருக்க முடியும்?

காந்தியடிகள் தமது தென்னாபிரிக்காக்கடமைகளை முடித்துக் கொண்டு தாய் நாடு திரும்புவதற்குப்பல வருஷங்கட்கு முன்னரேயே, பாரத சுதந்திரப்போரில் அவர் எடுக்கஇருந்த பொறுப்பையும், அதில் அவர் கையாளப்போகும் அஹிம்சா முறைகளையும் அரவிந்தர் தமது திவ்விய திருஷ்டி மூலம் கண்டு விட்டனர்: அவற்றை நாட்டுமக்களுக்கு நன்கு விளக்கியுமுள்ளார். 1909-ம்ஆண்டில் கோபால கிருஷ்ண கோகலே தீவிரவாதிகளைக் கண்டித்துச் செய்த பிரசங்கத்திற்குப் பதில் இறுக்கும்போது, சத்தியாக்கிரகம் ஒத்துழையாமை, பகிஷ்காரம், சுதேசியம், ஆகிய நான்கு பதங்களை விளக்கியிருக்கும் அருமையைக் கருத்தூன்றிப் படித்தால் காந்தீயத்திற்கு அவர் எவ்விதம் அடிகோலிவைத்தனர் என்பது நன்கு விளங்கும். பயிர்களையும் உயிர்களையும் செழிக்கச்செய்து பரந்து செல்லும் ஆற்றுக்கு வணக்கஞ்செலுத்தும் மக்கள் மலை உச்சியிலுள்ள அதின் ஊற்றை, அது அருவியாகப் பாய்ந்து வருவதை நினைவில் வைப்பதில்லை. ஆத்ம சாதனம் அரசியலுக்கு அடிப்படையாக இருக்க வேண்டுமென அரவிந்தர் வற்புறுத்திய அறநெறியை மிதவாதிகள் ஏற்க மறுத்தனர். அது அனுஷ்டானத்தில் முடியாத விஷயமென்றும், அவர்கூறுவது அசம்பாவிதமானதென்றும் நையாண்டிசெய்தோர் பலர். பத்திரிகை ஆசிரியர்களுள் காமாக்ஷி நடராசனும் சுரேந்திரநாத்வனர்ஜியும் முன்னணியில் நின்று கண்டித்து எழுதினர். அன்று அவர்கள் கருத்தில் எவ்வளவு புல்லறிவு இருந்ததென்பதை காந்தி சகாப்தம் நிரூபித்து விட்டது.

அரவிந்தர் எப்பெரியாரையாவது ஞானகுருவாக அடைந்திருக்காத போதிலும், சுவாமி விவேகானந்தரின் வீரகர்ஜனையால் ஆத்ம தாகம் வளரப்பெற்றவரென்பது நன்கு விளங்குகின்றது. 1897ம் ஆண்டில் சுவாமிஜி சென்னையில் செய்தபிரசங்கம் அவரின் உள்ளத்தை ஈர்த்த ஒன்று. அதில் அடங்கிய கருத்துக்களை அரவிந்தர் பலமுறை ஆமோதித்துள்ளார். இந்தியா தனக்குள்ள சுவதர்மத்தை உலகிற்கு ஞானபீடமாகவதியும் சிறப்பை—எக்காலத்திலும் இழக்கப்படாதென இருவரும் வற்புறுத்தியுள்ளார்கள். ஐரோப்பிய இயந்திர நாகரீகத்தின் அழிவை இருவரும் ஒரே கண்கொண்டு பார்த்து உண்மையை உணர்ந்தவரெனலாம். சுவாமிஜியின் குருதேவரான பரமஹம்ஸரைப்பற்றி அக்காலத்தில் எழுதியகட்டுரையில், "இராமகிருஷ்ணரின்வருகையால், மக்களின்இரட்சிப்புவேலை, இந்தியா தலைநிமிர்ந்து நிற்கும் நிலை ஆரம்பித்துவிட்டது" எனஎழுதியுள்ளார். [The work of salvation, the work of raising India was begun]

அரவிந்தர் கண்ட கனவுகள் மூன்று. இவற்றின் விபரத்தையும் விளக்கத்தையும் அவர்தமது மனைவிக்கு எழுதிய கடிதங்களிலும், அவரை மறுபடியும் அரசியல் சேவைக்கு வருமாறு அழைப்புக் கொடுத்த வப்ரிஸ்ரா, சித்தரஞ்சனதாஸர், விரேந்திரா கோஷ் முதலானவர்கட்குக் கொடுத்த பதில்களிலும் காணலாம். தாம் தனிமையில் செய்யும் தவத்தின் பயனுகை பாரததேசம் சுதந்திரம் அடையும்; அதற்கு அப்பாலும் மனிதசமுதாய சேவை இருப்பதால் தமதுதவத்தை நிறுத்தமுடியாதென்பதே அக்கடிதங்களின்சாரம். அவருடைய கனவுகள் பின்வருமாறு:– [1] முதலில் இந்தியா சுதந்திரம் பெறவேண்டும். [2] அடுத்ததாக ஆசியா சுதந்திரம் அடையவேண்டும். சுதந்திரம் பெற்ற ஆசியாவின் பிரதிநிதியாக இந்தியா பேசும்போதுதான் ஐரோப்பாவும் அமெரிக்காவும் அதின் உபதேசத்திற்குச் செவிசாய்க்கும் என்பது அவர் உள்ளக்கிடக்கை [3] மூன்றாவதாக, உலகமெல்லாம் ஒரே நாடாக, ஒரே அரசாக மாறவேண்டுமென்ற கனவு. இவ்வித மனித சமுதாய முழுவதின் ஒற்றுமை அத்யாதமத்தொடர்பில் ஏற்படக்கூடியதென்பதே அவர் கருத்து. ஓர் நாள் அதுகட்டாயமாக நிறைவேறும் என்பது அவரது அசைவற்ற நம்பிக்கை. சாதாரண மனிதனின் அவசர காலக் கணக்கிற்கும் அதற்கும் தொடர்பில்லை.

உணர்வற்ற கல்லினின்று உயிர்க்குலத்தை விழிப்புறுத்திப், புல்லில் உணரச்செய்து, விலங்கில் ஐம்புலனுணர்வீந்து, மனிதனில் மனவுணர்வு கிட்டும்வரையில் வளர்த்ததெய்வசக்திகள், அதனைவிஞ்ஞானவுணர்வுபெற்ற தேவகுலமாசப் பூரணப் படுத்தும்வரையில் தொண்டாற்றுமல் இருக்கவே முடியாது என்பது அரவிந்தர்சித்தாந்தம். இறைவன், உயிர், உலகம் ஆகிய மூன்றிற்கும் இணைபிரியாத தொடர்புண்டு. இறைவன் எப்போது உண்மையோ அப்போதே அவனுல் தோன்றிய உலகும் உண்மை. ஆகையால், அரவிந்தயோகத்தின் நோக்கம் உலகை உயர்த்துவதாகும். சமாதியில் லயித்துத் தப்பிக்கொள்ளும் தனிப்பட்ட மோட்சத்தோடு அது நின்றுவிடவில்லை. "அத்தியாத்ம சிந்தனையின் சக்தி உலகியல்பை மாற்ற வல்லது. ஒவ்வொருவரும் தம்முள் அத்யாத்ம ஜீவனை நிலை நாட்டினுல், உலகியல்பு தீவிரமாக மாறுதலடையும். வாழ்வும் செயலும் புதுமை பெறும். இவ்விதம் மனித இயல்பு முற்றிலுமே விஞ்ஞான மாறுதலடையும்போதுதான் தேவ ஜீவனம் சித்திக்கும். தேவ ஜீவனத்தின் வெற்றி அருளுணர்வை தூல வாழ்விலும் ஊக்குவதைப் பொறுத்துள்ளது" என்கிறுர் அரவிந்தர்.

ஆசையாணவம் அடியோடொழிக !
பொய்யும் வஞ்சமும் பூண்டுடன் அழிக !
பெருமைச் சண்டை புவியைவிட் டகலுக !
பொங்குக மங்களம் ! பூரணம் பொலிக !

# அவ்வியம் பேசேல்.

*(சுவாமி சித்பவானந்தர்)*

கூடா ஒழுக்கங்களில் ஒன்று அவ்வியம். பொறுமை என்பது அதன் பொருள். அவ்வியம் பேசுதல் என்னும் கோட்பாடு பிறந்துள்ளது. பொறுமையாக அடிப்படையாகக் கொண்டுள்ள சொற்களைச் சொல்லவேண்டாம் என்பது அதன் கருத்து. சிந்தித்தல், சொல்லுதல், செய்தல் என்பன திரிகரணங்களின் செயல்கள். மூன்று கரணங்களுள் ஒரு கரணம் எச்செயலில் ஈடுபடுகிறதோ அச் செயலை மறைமுகமாக மற்ற இரண்டு கரணங்களும் செய்கின்றன. பொறுமையினின்று வருகிற சொற்களைப் பேசாது ஒழித்

தல் வேண்டும், என்னும் கோட்பாட்டில் பொறாமைப்படுகிற மனப்பான்மை இருக்கலாகாது என்பதும், அதினின்று வருகிற செயல்களைச் செய்யாது ஒழித்தல் வேண்டும் என்பதும் அடங்கிவிடுகின்றன.

பிறர் அடைகிற முன்னேற்றத்தைப் பார்த்துச் சகிக்கமுடியாத நிலைக்குப் பொறாமை என்று பெயர். உயிர்களனைத்தும் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதே படைப்பின் நோக்கமாகும். மற்ற உயிர்கள் அடைகிற முன்னேற்றத்தைப் பார்த்து பொறுக்க முடியாதவன் படைப்பின் நோக்கமே நிறைவேறலாகாது என்று அதைத் தடைப்படுத்தும் பாங்குடையவன் ஆகிறான். மனிதனால் இயற்கையின் நடைமுறையைத் தடுக்கமுடியாது. எப்படியும் அது நிறைவேறிவிடும். ஏனென்றால் இயற்கையின் நடைமுறையே ஈசன் செயல். அதைத் தடுக்க அல்லது மாற்ற யாருக்கு இயலும்? பொறாமைப்படுகிற மனிதன் உண்மையில் மற்றவர்களுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்துபவன் அல்லன். பொறாமைப்படுதல் மூலம் தன்னுடைய முன்னேற்றத்தையே அவன் தடுத்துவிடுகிறான்.

மற்றவர்களுக்கு மனிதன் எதை எடுத்து வழங்குகின்றானோ அது தன்னுடையதாகிறது என்பது வாழ்க்கையைப்பற்றிய தத்துவம். பிறர் முன்னேற்றத்துக்குத் துணைபுரிகிறவன் தானே முன்னேற்றமடைகிறான். பிறர் முன்னேற்றத்துக்குத் தடைசெய்ய முயலுகின்றவன் தானே தடுமாற்றம் அடைகின்றான். ஆகவே பிறருடைய ஆக்கத்தைக் கண்டு பொறாமைப்படுபவன் தனக்கு ஆக்கம் வந்து அமையாது அதை அடைந்துவிடுபவன் ஆகிறான்.

பொறை என்பதின் எதிரிடை பொறாமை. மனிதனுக்கு வெறும் பொறை இருந்தால் மட்டும் போதாது. பிறர் அடைகின்ற பேற்றினைப்பார்த்துப் பெருமகிழ்ச்சி அடையவேண்டும். அவர்கள் அடைகிற பேறுகள் அனைத்துக்கும் பெருந்துணை புரியவேண்டும். யார் ஒருவன் அத்தகைய பரந்த பாங்குடையவன் ஆகின்றானோ அவனுக்கு எல்லாவித முன்னேற்றமுமுண்டு. அவன் மனத்துக்கண் மாசு இலன் ஆவதற்கும், மனம் மேன்மையடைவதற்கும், பிறர் முன்னேற்றத்துக்கு மகிழ்ந்தோடு தொண்டுபுரிவதே உற்ற உபாயம். அவ்வியம் அதற்கு நேர்மாறானது எங்கு அவ்வியம் இருக்கிறதோ ஆங்கு ஒருவிதமான முன்னேற்றமும் இல்லை, மனிதன் மேலும் சிறுமை அடைவதே அதன் விளைவு ஆகும்.

(தர்மசக்கரம்)

# அரவிந்த யோகம்.

## கீதோபதேசம்.

“நான் [இறைவன்] எல்லாருள்ளும் ஆத்மாவாக உள்ளேன். என்னையன்றி உலகில் யாதுமில்லை, தியானம், பக்தி, ஞானம், நிஷ்காமிய கர்மம், சரணாகதி இவைகளால் ஆத்மசித்திபெறலாம். ஆத்மசித்தி பெற்ற அன்பன் என்னுடன் இணைபிரியாது வசிக்கிறான். நான் அவனுடன் இணைபிரியாதிருக்கிறேன். எச்செயலைச் செய்தாலும் எனக்கு வழிபாடாகவே அவன் செயகிறான். இன்பதுன்பங்களை அவன் சமமாகக் காண்பவன், எல்லா உயிர்களையும் ஒன்றாக மதிப்பவன், சமத்வமே யோகம், அவன் உலக நன்மைகளுக்காகவும் மாந்தர் ஒற்றுமைக்காகவும் அசங்காரமில்லாமல் கர்மங்களைச் செய்கிறான்.

இந்த அருட்பணியே யோகம். மனமாசை நீக்கு, ஆசை யாணவங்களை விட்டொழி, உனது அந்தராத்மாவான இறைவனில் நிலைகொள், எல்லாவுயிர்களையும் அவன் மயமாகக்காணும் சமதர்சனம் பெறு. விருப்புவெறுப்பற்றிரு, உலகை ஈசுவரசக்தியின் விளையாட்டாகப்பார். உனது இதையத்திலுள்ள பரமாத்மாவிற்கே அர்ப்பணமாக மோகதாகங்களையடக்கி சாத்வீகப்புத்தியுடன் உலகில் வினைசெய். நீ ஜீவன்முக்தனாக வாழலாம்.”

கீதையின் இந்தமகத்தான உபதேசத்தை அநுஸ்டானத்திற்குக் கொண்டுவந்தவர் ஸ்ரீ அரவிந்தர்,

சித்தவிருத்தியை அடக்குவதே யோகம் என்றார் பதஞ்சலி. சமத்வமும் நிஷ்காமியகர்மமும் ஈசுவர சரணாகதியும் யோகங்கள் என்றார் கண்ணபரமாத்மா, எல்லாம் பிரமமயம்; தியாகபுத்தியுடன் பிறரைத் திருடாமல், உலகையநுபவி என்கிறது உபநிடதம்,

# யோகமணி விளக்கு,

—[சுத்தானந்தபாரதியார்]—

ஓங்கார மண்டபத்தில்—ஒளிரும்
யோகமணி விளக்கே
தூங்காத நல்லொளியே—இதயத்திற்
சுடர்நகை புரிவாய் 1

உச்சிக் கமலத்திலே—துலங்கும்
உண்மைச் சுடரொளியே
அச்சத் துயர் ஒழிய—உலகில்
அபயக் கதிர் பரப்பாய் 2

இமய வெண்பனிமேல்—சிவன்போல்
இலகுந் தீச்சுடரே
அமர கங்கையைப்போல்—உன்சக்தி
ஆடித் தவழாதோ. 3

நித்திய மோனத்திலே—அமைதியாய்
நீந்தும் தவச் சுடரே
சத்திய வாழ்வுபெற—உனது
தங்கத் தணல் பரப்பாய் 4

பூத வுடலினிலும்—தெய்வப்
புன்னகை பொங்கிடவே
வேதப் பொருளுருவி—எனவே
விம்மிப் புரண்டலைவாய் 5

மானிட வாழ்க்கையெல்லாம்—விஞ்ஞான
மாறுதல் பெற்றிடவே
ஆனந்த கானமுடன்—உலகில்
ஆடிக் களித்திடுவாய் 6

மனமயக்க மின்றி—சாதி
மதமயக்க மின்றி
வனமலர்களைப்போல்—உயிர்கள்
வாழவகை யருள்வாய். 7

# திவ்ய ஜீவன சங்கக் கிளை ஸ்தாபனம்

## நாவலப்பிட்டி

### இருஷிகேசத்துச் சிவானந்த நகரிலிருந்து சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள்

குறித்த தாபனத்தின் திறப்புவிழாவை முன்னிட்டு அனுப்பியுள்ள சுபசெய்தி.

இறைவன் முடிவிலாக் கருணைக் கடல்—முழுவுலகும் படைத்துக் காக்கும் முதல்வன்—உயிர்களைப் பந்தங்களிலிருந்து மீட்கும் பராபரன்—அத்தகையனாகிய ஆண்டவனுக்கு எமது அன்பார்ந்த வணக்கம்.

**ஆண்டவன் பேரன்பிற்குரிய அன்பர்களே!**

இப்புனித தினத்திலே இச்சுபசெய்தியை உங்களுக்கனுப்புவது பற்றி மட்டற்ற மகிழ்ச்சியுறுகின்றோம்.

வெளிமயக்காகிய வெறுங் காட்சி யுலகமே எமக்குப் புலனாகின்றது. உருவநாமபேதமயமான வேறுபாடுகளை இங்கு காண்கின்றோம். உணர்ச்சியும், நினைப்பும் ஆவேசமும், பற்றுள்ளமுமாகிய மனோவிகாரங்களுக்குட்பட்டு நாம் மாய்கின்றோம். இக்காட்சி யுலகத்துக்கும், இவ்வுருவநாம பேதங்களுக்கும் இத்தகைய மனோவிகாரங்களுக்கும் அப்பால் நிலைத்துள்ளது ஒன்று உண்டு. அது அறிவின் அமைதியாயுள்ளது; உங்கள் நன்மையை நாடும் உங்கள் ஆப்த நண்பனாயமைந்துள்ளது அதுவே. பரமாத்மா எனப்படுவதும் அதுவே. உங்கள் அறிவுக்கப்பால் நிகழும் உங்கள் உத்தம குருவும் அதுவேயாம். அனைத்துலகங்களையும், அனைத்துயிர்களையும் ஆண்டருளும் ஆண்டவனும் அதுவேயாம். காட்சிக்கப்பாற்பட்ட கருத்துப் பொருளாம் மனச்சாட்சியாயுள்ளது அது. பிரமம் என்ற பெயருடன் நிலைபாய் விளங்கும் பொருள் அதுவே. அதுவொன்றே எமதுயிர்க்குயிராகவுள்ள நித்திய ஜீவன்.

மாற்றமடையும் இயல்புள்ள இவ்வெளியுலகக் காட்சிகளுக்கு அப்பால் மறைந்திருக்கும் அநித்திய ஜீவனை எம்முள்ளுணர்வா லாராய்ந்து உணர்வதே எம் வாழ்வின் முக்கிய நோக்கமாகும். இவ் வாராய்ச்சியொன்றே உங்களைக் கன்மத் தளைகளிலிருந்து விடுதலை யடையச் செய்யும். நீவிர் எல்லீரும், தளராத பத்தி யொழுக்கத்தின் வாயிலாக இவ்விடுதலையைப் பெறுவீர்களாக! அழிவில்லாப் பேரின் பமாகிய இவ்வமிர்தத்தைப் பருகிச் சம்சார வெப்பந் தணித்து உல கத் துன்பங்கள் நீங்கி உய்வீர்களாக.

உங்கள் நிலையான இருப்பிடத்தை தேடிக் கண்டுகொள்ளுங் கள். அவ்விருப்பிடத்திலேயே நீங்காது உறைந்து கொள்ளுங்கள். உங்களுக்கு மேலான இன்பமும் நிலையான விளக்கமும் அளிக்கு மிடம் அது. அந்த இடமே உங்களுக்கு மேலான வீடும் மேலான கதியுமாகும். உங்கள் பழைய இருப்பிடமாகிய அதனை மீளவும் அடைந்து நிரந்தர சமாதான இன்பத்தைக் குறைவறப் பெற்று அநு பவிப்பீர்களாக!

புலன் வழிச்செல்லும் அவாக்களை அடியோடு கைவிட்டு விடுங் கள். ஆசை, ஆவல், கோபம், சஞ்சலம் ஆகிய தீய இயல்புகள் அனைத்தையும் விட்டொழித்து விடுங்கள். நல்லறிஞர்களோடு சக வாசம் பண்ணிக்கொள்ளுங்கள். என்றும் சாத்வீக உணவையே அருந்துங்கள். தார்மீக குணங்களை மென்மேலும் விருத்தியாக்கிக் கொள்ளுங்கள். அவற்றுக்குப் பாதகமான குணங்களை அகற்றிவிடு ங்கள். இன்பத்தில் மயங்காதீர்கள். துன்பத்தில் மாழ்காதீர்கள். இவ்விரண்டுமில்லாத சமநிலை மனப்பான்மையை ஆக்கிக்கொள்ளு ங்கள். ஒழுங்காகத் தெய்வத்தைத் தியானியுங்கள். தெய்வநாம பா ராயணஞ் செய்யுங்கள். தெய்வத்தின் புகழைப் பாடுங்கள். கட வுளை வணங்கி அவர் கருணைக்கு உங்களைத் தகுதியாக்கிக்கொள்ளு ங்கள். உயிர்க்குலமனைத்தினுக்கும் இயன்றபடியெல்லாஞ்சேவை செய்யுங்கள். ஏழைகளுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் விசேஷ தொண்டு புரியுங்கள். சேவையே இதய சுத்தியை அளிக்கும். "சீவ சேவையே சிவசேவை" அதுவே ஆண்டவனுக்கு அன்பான வழி பாடாகும்.

உங்களிடத்தில் ஓய்வின்றி யெழும் விருப்பங்களைத் தேவைக் குத் தக்கபடி மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். உலக சம்பந்த

மான எண்ணங்களைத் தணிக்கை செய்து கொள்வதனால் மட்டுமே ஒருவன் நிலையான மனச்சாந்தியைப் பெறமுடியும். நாளாந்த தேவைகளை இயன்ற அளவு குறைத்துக்கொள்ளுங்கள். உயிரும் உணர்வும் ஒன்றுபடக் கருத்தொருமித்து உங்கள் கடமையில் ஈடுபடுங்கள். "கடமையைக் கருத்தோடு செய். பலனிற் பற்றுவையாதே. பலனை ஆண்டவனே ஏற்கட்டும்" எப்போதும் தைரியமும் துணிவும் ஆனந்தமும் உடையவராய் இருந்துகொள்ளுங்கள். இதுவே ஆத்மீக வெற்றியின் இரகசியம்.

திவ்ய ஜீவனத்தில் ஈடுபடுங்கள் ஆண்டவனைப்பற்றிக்கொண்டு அநுதினமும் வாழுங்கள். சாந்தமயமான சந்தோஷ சமாதானத்திலே சலனமின்றி விளங்குவீர்களாக!

எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்குத்திடகாத்திரமும், தீர்க்காயுசும், வாழ்க்கையில் இன்பமும், செழிப்பும், வெற்றியும், விடுதலையும் அருளுவானாக!

---

## தேவ மனிதர்

-[ சுத்தானந்தபாரதியார் ]-

நெஞ்சினைக் கோயில் ஆக்கி
    நிமலனை நினைக்குந் தூயர்
வெஞ்செருக் கில்லா நண்பர்
    விழுமிய புலமை பெற்றார்
வஞ்சனை யற்ற தொண்டர்
    வாய்மையே வடிவ மானார்
செய்செயல் புரியும் சீலர்
    தெய்விக மனிதர் தாமே.

# யோக ஆசனங்கள்.

(S. A. P. *சிவலிங்கம் ஞானகுரு யோகாசனசாலை, சேலம்,*)

யோகத்தின் அங்கம் எட்டுவகை: அவை: இயமம், நியமம், ஆஸனம், பிராணயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இனியாராய்வோம்.

இயமம்: பத்துவகையுண்டு அவையாவன:—

"அந்நெறி இந்நெறி என்னாதெட்டாங்கத்
தன்னெறி சென்று சமாதியிலே நின்றுன்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்திலேகமாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லையாகுமே"

*-திருமூலமுனிவர் பகர்ந்தார்*

இவ்வட்டாங்கயோக சூத்திரத்தின் பெருமையும், பலனும் எத்துணைப்பெரிதாம் எனவும் போற்றவேண்டும். மேலும்

*"தேடும் இயம நியமாதி சென்ற உன்*
*நாடும் சமாதியில் சற்றுப் பரசிவன்*
*பாடுறச் சிவன் பரமாகப் பற்றறக்*
*கூடும் உபசாந்தம் யோகாநந்தக் கொள்கையே"*

—திருமூலமுனிவர் மேலும் பகர்ந்தார்'

இனி இயமத்தைப்பற்றி விளக்குவோம்:-

கொல்லாமை, சத்தியம், திருடாதிருத்தல், பிரம்மசர்யம், க்ஷமை, தைரியம், தயை, நேர்மை மிதாகாரம், சௌசம் என பத்துவகையுண்டு: அதன் விளக்கம்

கொல்லாமை:- எப்பிராணிகளுக்கும் துன்பம், ஹிம்ஸை, உயிரைப்போக்குவது (கொல்வது) முதலியன செய்தல் கூடாது. தன்னுயிரைப்போல் பாது காத்தல் வேண்டும்: ஆத்மாவை மீறி எக்காரியமும் செய்யலாகாது. உயிரின் உண்மையறிவாகிய கொல்லாமையைப்பெரிதும் போற்றவேண்டும். தன்னால் செய்வதும், பிறரைக்கொண்டு செய்வதும், செய்வதைக்கண்டு நல்லதென ஆமோதிப்பதும் கொல்வதுக்குச் சமமே.

சத்தியம்:- புறப்பொருள் முதலிய நேத்திரேந்திரியங்களால் தாம் கண்டவைகளை அப்படியே சொல்லுவித்தல். இவற்றை விள

க்கிச் சொல்லுமிடத்து எப்பொழுதும் உண்மையே பேசிவந்தால் சுவர்க்காதி பலத்தைக்கொடுக்குந்தன்மை தான் சொன்ன மாத்திரத்தில் பலிதமாகும்.

திருடாதிருத்தல்:-

"அந்நியர் பொருளை யபகரி யாமையே
கள்ளாமை யென்று கழறப்படுங்காண்"

எக்காரணங்கொண்டும் பிறரின் பொருளை, இரத்தினம், பொன் முதலான பொருளையும் ஆசையினால் கவர எண்ணாதிருத்தல், இதன் மகத்துவம் திவ்விய ரத்தினங்களும் அவன் முன் நிற்கும்.

பிரஹ்மசர்யம்:— தன் விந்துவை தீயவழிகளில் விரயம் செய்யாதிருத்தல். தன் மனைவியைப் புணர்ந்தும் பிறமாதரைவாக்கினால்கூட நினைக்காதிருத்தல்: இதன் விளக்கம் எண்வகையுண்டு. அவை: ஸ்திரீகளை ஆசையுடன் பார்த்தல், தீண்டுதல், விளையாடுதல், அவர்களை பெருமையுடன் பேசுதல், இரகசியமாய்ப்பேசுதல், இன்பத்தை (சிற்றின்பம்) நாடவேண்டுமென நினைத்தல், நிச்சயித்தல், ஊடையாடுதல் முதலிய எட்டுவித குணங்களை விட்டொழிக்க வேண்டும். பிரஹ்மசர்யத்தைப்பற்றி "மற்றதவங்களெல்லாம் தவங்களாகா, பிரஹ்மசர்ய தவமே தபஸ் எனப்படும்" பிரஹ்மச்சர்யத்தைக்காப்பவன் மனிதனல்லன், அவன் தேவனே யாகின்றான்" என்று பல நூல்கள் முறையிடுகின்றன,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

—செந்நாப்போதார்.

பிரஹ்மசர்யத்தைக்காப்பாற்றினால் சரீர இந்திரியமனதுகளினால் எல்லாக்காரியங்களையும் செய்ய சாமர்த்தியமுண்டாகும்.

க்ஷமை;- பிறரின் தூண்டுகோலினாலும் தீய எண்ணங்களினாலும் தனக்கு அபகீர்த்தியுண்டாயின் அவற்றைப்பொறுத்துக்கொண்டிருத்தல்.

"எத்துயராதிய வெய்தினும் அற்பமுங்
கலங்கா தொறுத்தலைக் கமையென மொழிவரே"

இதனால் சரீர அபிமானம் ஒழியும்.

தைரியம்:- "உண்மையினிற்குமுறுதியே தைரியம்" சம்சாரமார்க்கத்தில் நிற்கும் உறுதி அனர்த்தமாக முடிவதால் அவற்றை நீக்கி வைதிகமான கடவுளையடைய வேண்டுமென்ற முக்தி மார்க்கத்தில் நிற்றலாகிய உறுதியே தைரியமெனப்படும். இதுவே சரியான மார்க்கம். இதனைப் பல பரியந்தம் சாதிப்பேன் என்னும் திடவுறுதி கொள்ளல். இதனால் இச்சித்த பயன் பெறப்படும்.

தயை:— தன்னுயிர்போல பிற உயிர்களிடத்தும் பொறுமை உண்மைகளைக் காணல். "இன்னுயிர்த் துயர்கண்டிரங்கலே தயையாம்" தயையில்லாத குரூர சித்தத்தில் நிகழும் தீய எண்ணம் மற்சர முதலிய தீக்குணங்களும். கொலை முதலியவற்றாலும் பாவமும் தயையுமுள்ள சித்தத்தில் நிசமாகாமையின். அச்சித்தம் தெளிவுடையதாய் விரைவில் யோக சித்தியை பெறுவதற்கேதுவுடையதாகும் ஆதலால் எவ்வுயிர்க்கும் நம்மால் தொந்தரவு செய்தல் கூடாது. இதனால் சர்வஜனப் பிரீதியுண்டாகும்.

நேர்மை:- தன்னைச் சேர்ந்தவர்களிடத்தும், சத்துருக்களிடத்தும், தன்னிடத்தும் வித்தியாஸமின்றி சமானமான புத்தியினைச் செய்தல்.

புத்திர மித்திர களத்திராதிபர் தன்னைப்போலொத்தவர்கள். எல்லோரிடத்திலும் தன்னைப்போலவே சுகம். துக்கம் இலாபம், நஷ்ட முதலியவற்றைக் கவனித்து, ஒருவரிடத்து அநுகூலபுத்தியும் ஒருவரிடத்துப் பிரதிகூலபுத்தியும் செய்தலாகிய கபடமின்றிய நேரான தன்மை இதனால் மனமகிழ்ச்சியுண்டாகும்.

மிதாகாரம்:- அமுதமாயினும்: இழிந்த கூழாயினும் ஒப்புக்கொண்டு உண்ணுதல். உணவு, அரை வயிறும். நீர்கால்வயிறும். கால் வயிறு வாயுவுக்கும் வேண்டும். இதனால் பலவித வியாதிகளின்றி உடலுக்கு ஆரோக்யமுண்டாகும். உணவு அரைவயிறாக உண்ணாது நிறைய உண்ணுமிடத்து உண்டவுணவு ஜீரணமாவதற்குவேண்டிய ஜலம் பருகுவதற்கு இடமின்றி அஜீர்ணமுண்டாகும். நீரையும் அதிகமாகக்குடித்தால் பிராணவாயு உள்ளே செல்வதற்கிடமின்றி வெளியேறிச்செல்லும். அவற்றாலும் ஜீரணக்குறைவுண்டு. அவற்றால் கெடுதியேற்படும். ஆகவே மேற்சொல்லியவாறு உண்டியருந்தல் வேண்டும்.

"நல்லூணகடரை நன்னி ரொருகா
லுயிர்பிற் கொருகாலா வுண்ணலே மிதவூண்"
—யோகசூத்திரம்

சௌசம்:- தன்னுடலை மண் முதலிய (செம்மண்) வற்றால் விதிப்படி நீரினால் சுத்தி செய்வதே புறச்சுத்தம் எனவும், வேதமுடிவாகிய சித்தாந்தப் பொருளை மனத்தில் உறுதியாகக்கொண்டு பாசம் நீங்குமாறு நிற்பதே உள்சௌசமெனவும் இருவகைப்படும்.

"புறந் தூய்மை நீரானமையும் அகந் தூய்மை
வாய்மையாற் காணப்படும்"
- பெருநாவலர்

இதனால் சத்துவகுண சம்பத்தியும், தன்சரீரத்தில் சுத்திகாணாது அருவருப்பும், பிறசரீரத்தினைத் தீண்டாமையுமுண்டாகும்.

## நியமம்.

இனி நியமத்தைப்பற்றியாராய்வோம்:- நியமம் பத்து வகை யாவன: அவை: தவம், சந்தோஷம், விசுவாஸம், தானம், ஈசுவர பூஜை, சித்தாந்தசிரவணம், நாணம், மதி, ஜபம், விரதம் என்பவைகளே.

"கிருச்சி ராதியாற் கிருசம தாகவே
வுடலை யுலர்த்துத லொள்ளியதவமாம்
வேத விதியினை விரும்பிய நுட்டித்தல்
யோகத்திற் கேற்றவுயர்தவமாகும்"

- யோகசூத்திரம்

தவம்:- மோக்ஷமென்பது யாது? முக்தியாவது யாது? சீவன் முக்தனாவது எப்பொழுது? பந்தம் எனக்கு எவ்வாறுண்டாயிற்று? எனவும் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து சாந்திராயணம் கிருச்சிரம் முதலிய விரதங்களை அநுஷ்டித்து உடலை வருத்துதல் இதனையனுசரித்தலால் அணிமாதிசித்தியும் [எட்டுவிதசித்தி] இந்திரியங்களின் தூரதிருஷ்டியும் சித்திக்கும்.

**சந்தோஷம்:-** பிராரப்தகர்மத்தால் கிட்டியது எதுவோ அதில் கிடைத்ததே போதுமானதென்று சித்தத்திலுண்டாகும் திருப்தியே —பிரஹ்மலோக பரியந்தமுண்டாகும் ஆசையை யொழித்து ஆத்ம ஞானத்தையே விரும்பியிருத்தல்.

"கிடைத்ததி லாந்திருத்தி கிலேசமில் சந்தோஷம்"

சந்தோஷத்திலும் மேலான ஆனந்தமில்லை என சிலஸ்மிருதிகள் முறையிடுகின்றன. இதனால் ஆத்மத்துள்ளே நிரந்தரமான சுக முண்டாகும்.

**விசுவாஸம்:-** வேதாந்தங்கள், ஸ்மிருதிநூல்களில் போதிக்கும் கருமங்களில் நாடோறும் மிக்க ஆவல்உடமையாம். "சுருதியாதி சொலுமவை நம்பலே. யாத்திக்கியமென் றறையப்படுமால்" இத னால் இகலோகம், பரலோகம்முதலிய சுகத்தைப்பெற்று, முக்தியை யும் பெறுவார்கள்.

**தானம்:-** நல்வழியிலீட்டப்பெறும் பொருளை கடவுளுடைய மெய்யன்பர்களுக்கு வகையோடு தருதலாம். அனியாயவழியில் தேடிப்பொருளைக் கொடுத்தலும். வறியரல்லாதவர்க்கு கொடுத்த லும் வறியரிலும் பணத்தைப் புதைத்துவைத்தாவது, வட்டிக்குக் கொடுத்தாவது, வறியர்போல் நடிப்பவர்களுக்கு கொடுத்தலும். தன் சக்திக் கதிகரித்தும் பாத்ரவிவேசமில்லாமலும் அவர்களுக்கேற்ற சமயம் இதுவென உணராமலும் கொடுத்தலும். டம்பார்த்தமாகக் கொடுத்தலும் இகழ்ச்சிக்கேதுவாகுமாகலின். அத்தன்மைகளில்லாத தானமே "இகழ்விலாத்தான" மெனப்படும். நியாயச் சித்தப்பொருள் எனவும் கூறப்படும். "நியாயார்ச் சிதப்பொருள் இதியிலாவறியார் கேற்றவாறீதலே யிகழ்விலாத் தானமாம்," இவற்றினால் சகலபாப மும் குறையும்.

**ஈஸ்வரபூஜை:-** தன் இஷ்ட தெய்வத்தினை மந்திரத்தோடு தனக்கு மனம் நெகிழும்வரையில் ஆதரித்தல்.

"ஈசனையன்போடி யன்றவா பூசித்த
லிறைவன் பூசன மென்னப் படுமே"

இதனால் சமாதி சித்தியாகும்.

**சித்தாந்த சிரவணம்:-** வேதங்களிற் கூறிய உபநிஷதங்களிற் கூறப்படும் விசயங்களை ஆசிரியன்முன் கேட்டு ஆராய்ந்து நாம் நிச்சயித்தல். மகாதேவராகிய சிவபெருமானுடைய புராணங்களை எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருத்தலும் சித்தாந்த சிரவணமே. இதனால் பிரஹ்மம், நித்தியம், ஜகத்து, அநித்தியமென்னும் பரோக்ஷ ஞானமுண்டாகும்.

**நாணம்:-** வேதசம்பந்தமானதும், உலகசம்பந்தமானதுமான எக்கருமத்தையும் செய்வதற்கு வெட்கப்படுதல்.

"கருமத்தானுணுத ணுணுத் திருநுத
ணல்லாவர் நாணுற்பிற"

இதனுல் தைரியம் உண்டாகும்.

**மதி:-** கடவுளின் திருவடியை நோக்கிச் செய்யும் வைதிக சைவக்கிரியைகளில் சிரத்தையுண்டாதலாகும். இதனுல் கர்மம் பலத்தோடு கூடியதாகும்.

**ஜபம்;-** "வேதத்துட்கூறுமேலாமந்திரம்
விதியொடுபழகவேவிளம்பியசெபம்"

குற்றமற்ற ஆசாரியன் உபதேசித்த உபாசனை மந்திரத்தை அன்பு ஆக்கத்துடன் விதிப்படி சொல்லுதல். இதனுல் இஷ்டதேவதை பிரசன்னமாகும்.

**விரதம்:-** வேதத்தில் சொல்லப்பட்ட தமக்குரிய நித்தியமும் செய்து பூஜை, சிவத்தியானம். ஆலயவழிபாடு முதலியவற்றைச் செய்தலாம். இதனுல் சித்த சுத்தி பெறுவர்.

"தவம் செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவன்தன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசை யொண்மதி சொல்லீரைந்தும்
நிவம்பல செய்யின் நியமத்தனுமே"

என்றார் திருமந்திரமுனிவர்.

**நித்தியம்:-** தினந்தோறும் செய்யப்படும் சந்தியாவந்தனம் தேவ பிதுர்தர்ப்பண முதலியன, நைமித்திகமாவது ஏகாதசி, அமாவாசை. கிரகண முதலிய நிமித்தத்தாற் செய்யப்படுவது.

இவ்வாறு பத்துப் பாகங்களைக்கொண்ட இயமம், நியமம் என்பவைகளை விளக்கினோம். இவைகள் வாழ்க்கையிலேயே ஒட்டி வாழவேண்டும். இவைகளே யோகத்தின் முக்கிய இரு அங்கங்களாகும். இதனால் ஏற்படும் பலன்களையும் காட்டியுள்ளோம். ஆகையால் சில முக்கியமான விதிகளைக் கவனித்தே ஆத்ம அறிவைக் கொண்டு விவேகத்தால் நன்மை பெறுங்கள்.

இவ்வியம, நியமங்களை கடைப்பிடித்தொழுகும் சமயம் பற்பல உபாதைகள் வந்து சேரும். அவற்றைக் கடந்து மனம் வைராக்கிய முற பதஞ்சலியோக சூத்திரத்தில்

"விதர்க்கபாதனே ப்ரதிக்ஷ பாவனம்"

ஸாதனபாதனம் 33.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது! என்னவென்றால் இச்சமயத்தில் இவனை துன்புறுத்தியே தீரவேண்டுமெனவும், பொய் சொல்லித் தான் தீரவேண்டுமெனவும், இவன் பொருளை எவ்வகையிலும் அபகரித்தும், பத்தினியுடன் போகம் செய்தும், கெட்டவழியிற் செல்லுதற்கு ஹேதுவான ஓர் வித தீய எண்ணம் மனதிலுண்டானால் பின்வருமாறு மனத்தால் பாவிக்கவேண்டும். அதாவது வெகு ஜன்மங்களால் கொடூரமான ஸம்சாரமாகிய நெருப்பால் பொசுக்கப்படும் நாம் எவ்வுயிர்க்கும் அபயமளிக்கும் யோக தர்மத்தைசரணமாக அடைந்தோம். அத்தகைய நாம் தீச்செயல்களை செய்தால் நல்லன விட்டு மறுபடியும் தீயதையே கடைப்பிடித்தோமெனவும், உணவை வெளியிற் கக்கிவிட்டு திரும்பவும் அதையே கக்கியதையே உட்கொள்ளும் நாய்க்குச் சமம். இரண்டுக்கும் வேற்றுமை இல்லை! என இவ்வாறு நினைத்து மனத்தைத் திருப்பி சாதனை செய்து வரவும்.

இனிமேல் யோகாஸனத்தைப்பற்றி ஆராய்வோம்.

# ஸ்ரீ கதிரைமணிமாலை.

[பரமஹம்ஸதாசன்.]

புனித! நின்பே ரருட்பணியில்
புகுதா[து] அவமே காலமெலாம்,
மனிதத் தன்மை யற்றார்க்கே
மாடாய் உழைத்து வலியிழந்து.
பிணி,மூப் பின்னல் தமைப்பரிசாய்ப்
பெற்று வருந்தும் பெரும்பேதை
எனைநீ மன்னித் திடுவாயோ?
இலையேல் ஏழைக் குய்வேது? [48]

அஞ்சு வயது வரைபேசி
யறியாக் குமர குருபரர்தம்
பிஞ்சு மனத்திற் கடல்மடைபோற்
பீறிட் டெழும்பக் கவியமிழ்தம்.
செஞ்சொற் புலமை தந்தஅருட்
செல்வா! நினது திருமகிமை
பஞ்சைக் குரைக்க வசமாமோ?
பக்திக் கிரங்கும் பரகுருவே! [49]

*ஆடி தனில்நின் சுடர்வடிவை
அல்லும் பகலும் அகமுருகி
நாடிக் கி[illegible]ந்த இராமலிங்க
ஞான வள்ளல் தமைக்கொண்டு
பாடிச் சுழன்ற தமிழ்ப்பயிரின்
வாட்டம் தீர மாமழைபோல்
ஈடில் லாப்பே ரருட்பா.தந்
திடச்செய் திட்ட இசைக்கதிரே! [50]

உற்றார் எனினும், உன்னுறவை
ஒட்டார் பாலென் உளங்கலவேன்;
கற்றார் எனினும், உனைவணங்கக்
கல்லா ரிடத்துக் கருத்தூன்றேன்;
நற்றா யாய்.என் தந்தையுமாய்.
ஞானக் குருவாய் அருள்செய்யுநின்
பொற்றாள் அன்றி மற்றொன்றைப்
புகலாய்ப் புவியிற் கொள்ளேனே! [51]

* கண்ணாடி

ஓடி யோடி உலகமெலாம்
உழன்றே திரியும் மனக்கடையேன்.
நாடி யுனது கழலடைய
ஞானக் கருணை செய்தாயே:
வேடிக் கையாய் நினைப்பதெலாம்
விரைவில் கண்முன் ஆக்குவதுன்
கோடிக் கணக்கில் விரிந்தநறுங்
குணத்தில் ஒன்றாய்க் கண்டேனே! [52]

முருகா வருக: தமிழாய்ந்த
முதல்வா வருக! வேங்கடவன்
மருகா வருக! அருளொழுகும்
வதனா வருக! எனையாளக்
குருவாய் வருக! எமதுகுலக்
கொழுந்தே வருக! மயிலேறி
விரைவாய் வருக! இதுதருணம்
வேலா யுதனே வருகவே! [53]

ஐயா வருக! கதிரமலைக்
கரசே. வருக! ஆறிரண்டு
கையா வருக! அருள்பொழியும்
கண்ணா வருக! விரைகமழும்
மெய்யா வருக! வினையொழிக்கும்
வேலா வருக! அடிமையினேன்
உய்யக் கலாப மயிலேறி
ஓடி வருக! வருகவே! [54]

வள்ளி யம்மை, தெய்வானை
மருவித் திகழ, மரகதப்பொன்
புள்ளி மயிலில் பேரெழில்த்தேன்
பொங்கிப் பெருக, இருள்கடிந்து
வெள்ளிக் கதிர்வேல் ஒளிபரப்ப,
விரைந்தென் மனப்பே ரலைகடலில்
துள்ளி யெழுந்து வருக. அருட்
சோதி ஞானச் சுடர்ப்பரிதி! [55]

# நடராஜ தத்துவம்.

(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

*தத்துவம் ஆடச் சதாசிவம் தான்ஆட*
*சித்தமும் ஆடச் சிவசக்தி தான்ஆட*
*வைத்த சராசரம் ஆட மறைபாட*
*அத்தனும் ஆடினன் அம்பலக்கூத்தே*

அமைதி. ஆட்டம் என்ற இரு நிலைகள் உள்ளன. வானம் அமைதியாக மேலே விரிந்துள்ளது. வானணுக்கள் ஆடுகின்றன. அந்த ஆட்டமே சுடர்மணிக் கணங்களாகவும், காற்றாகவும், கனலாகவும் நீராகவும், மண்ணாகவும் பயிராகவும் உயிராகவும் பரந்து விரிகிறது.

*வானமும் கடலுமாகி மாமழை அமுதமாகிக்*
*கான்மலை யருவியாகிக் கனிமலர்ச் சோலையாகி*
*ஊன்வளர் உடலாய் அந்தஉடல்வளர் உயிராய்ஆங்கே*
*நான்வளர் தானாய்நின்று நடம்புரி சிவமேபோற்றி!*

மாயாதனுவில் உள்ள தத்துவங்கள் மாயா சக்தியால் ஆடுகின்றன: மாயாசக்தி சுத்த சக்தியால் இயங்குகிறது. சுத்த பராசக்தி சுத்த சிவத்தின் அருள் வல்லமையாக இயங்குகிறது: இந்த இயக்கமே உலகும், உயிரும், உயிர்வாழ்வும், வாழ்வின் எழுச்சியும், முதிர்ச்சியுமாகின்றன. வானணுக்கள், மீனணுக்கள், ஊனணுக்கள் எல்லாம் நான் என்ற ஒரு தத்துவம் பற்றி ஆடுகின்றன. நான் என்பதற்குப் பின்னே தான் என்ற ஒரு முதற்பொருள் உள்ளது. அதுதான் நடராஜா. அதன் அருட்கூத்தே ஆக்கல். அளித்தல், அழித்தல், அடக்கல், அருளல் என்ற ஐந்து அகாரத்தொழில்களாகும்.

*தத்துவங்கள் ஆடவே சலித்துமாயை ஆடவே*
*முத்தொழில்கள் முக்குணங்கள் முன்னிலையில் ஆடவே*
*சித்தமாடச் சுத்தமான சிவனாடச் சீவனுன்*
*அத்தனாடக்கண்ட போதில் அச்சமில்லை யில்லையே!*

நீயார்? எனும்போது "நான் சிவன்" என்று எங்கே கை வைத்துப் பேசுவதோ அங்கேதான் நெஞ்சுத் துடிப்பு அதிர்கிறது:

இரண்டு திருவடிகள் "சிவம் சிவம்" என்று நடனமாடுகின்றன: இது தான் தில்லைக் கூத்து என்பது.

தில்லையின் பெருமைக்கு எல்லையில்லை. உலகின் நடுநாயகமாக அமைந்த தில்லை வேதாகமக்கலை வடிவாயுள்ளது.

"எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாயி ருத்தலால் எங்செங்கும்
தங்கும் சிவனருள் தன் விளையாட்டத்தே"

என்கின்றார் மூலமுனிவர்.

தில்லையும் சிதம்பரமும் நம் உள்ளமே நமது உள்ளத்தின் நடுவேயுள்ள சிதாகாசமே. அதையே தகர நிலையம் என்பர். ஆகாசமே பிரம்ம சரீரம் என்னும் வேதம். அந்த ஆகாசத்தையே இலிங்க வடிவாக வணங்குகிறோம். இலிங்கமே இறைவனின் இயல் வடிவமாகும். வானாகிய இறை வடிவமே வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி விளையாடுகிறது. தில்லையும், சிதம்பரமும் உள்ளும் உண்டு: உலகிலும் உண்டு: அணு அணுவான இயற்கையிலும் உண்டு.

*எல்லையற்ற நல் இன்னுயிர் உள்ளமே*
*தில்லை யாகத் திருநடஞ் செய்பவன்*
*இல்லை என்பவர் உள்ளும் இருப்பவன்*
*சொல்லைத் தூண்டித் துலக்குக வெற்றியே*

அவரவர் உள்ளத்தையே கோயிலாகக் கருதுக: ஆங்கே தியானத்தை ஊன்றுக: சிலம்பொலி கேட்கும்: திருநடனம் காணும். இந்தச் சிலம்பொலியைக் கேட்கவே சேரமான் பெருமாள் நாயனார் தவமிருந்தார், நாடோறும் அவர் நடராஜ உபாசனை செய்தார்: அவர் அன்பை ஏற்ற கூத்தனும் சிலம்பொலித்தான்: ஒருநாள் ஒலி கேட்கவில்லை. சேரமான் அயர்ந்தார்: சுந்தரர் செந்தமிழைப்பருகி நின்றதால் எம்பெருமான் வரத்தாமதமானதாம். சேரமான் சுந்தரரை நாடிச் சிதம்பரம் வந்தார்: இருவரும் தில்லையப்பன் சந்நிதியில் அன்பு செய்தனர்; இரண்டு அடியார் உள்ளத் துடிப்புகளைப் போல எம்பெருமான் கூத்தொலி கேட்டது; சிலம்பொலி கேட்டது.

ஆடற் சிலம்பின் ஒலி கேட்பார்
அளவில் இன்ப ஆனந்தம்
கூடப் பெற்ற பெரும் பேற்றின்
கொள்கை வாய்ப்பக்கும் பிடுவார்
நீடப் பணியும் கால மெல்லாம்
நின்று தொழுது புறம் போந்து
மாடத் திருமாளிகை வீதி
வணங்கிப் புறத்து வைகினர்.

—பெரியபுராணம்.

இந்த ஆடற்சிலம்படியில் கூடி நிற்காத திருத்தொண்டர் யாரே! உள்ளத்தை உருக்கும் திருவாசகத்தேன் பொழிந்த மாணிக்கவாசகர். "இதுவே அதன் பொருள்" என்று அந்தத் திருவடி நீழலிற் சேர்ந்தார். சாதி குலம் பிறப்பு என்னும் சுழியிற் பட்டுத் தடுமாறும் பேதைப் பிறப்பறுத்து யான் எனது என்ற உரைமாய்த்து எல்லாம் சிவமயமானார் மணிவாசகர். சிந்தனையும் வந்தனையும், வாக்கும், நோக்கும் நமச்சிவாய வடிவான நடராஜப் பெருமானுக்கே அர்ப்பணித்து அவன் சுடரொளியில் இரண்டறக் கலந்தார். "போற்றியோ நமச்சிவாய சய சய போற்றி" என்று அவர் அன்று எழுப்பிய நாதம் இன்னும் நமது செவியில் சுழல்கிறது. அந்தண மாணிக்கம் போலவே ஹரிசன நந்தனாரும், புனிதமாகித் தில்லைவாழ் அந்தணருடன் சென்று நடராஜ சோதியிற் கலந்தார்.

"தில்லைவாழ் அந்தணரும்
உடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார்
கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோய் உட்புகுந்தார்
உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார்
யாவர்க்கும் கண்டிலரால்"

—பெரியபுராணம்

பாலறு வாயரான திருஞான சம்பந்தர் "முதல்வன் பாதமே பற்றுநின்றாரைப்பற்றா பாபமே" என்று பாடினார். அவருக்கு யாழிசைத்த திருநீலகண்டர் புலனடக்கத்தால், நடராஜப்பெருமான் கருணையால் இளமை பெற்றார்.

# நானும் எனது குருநாதரும்.

[அ. இராமசாமி]

யாரையும் நம்பி வாழாதே. ஆண்டவன் ஒருவனையே நம்பிஇரு என்பது எனதருமைக் குருநாதரின் உபதேசம். இந்த உபதேசத்தை வாழ்விலே கடைப்பிடிப்பவர் நூற்றுக்கு ஒன்றிரண்டு பேர்தான் இருப்பார்கள். இவர்களை என் குருநாதருக்கு அருகாமையில் வந்து விட்டவர்களெனச் சொல்லலாம். என் தெய்வீக வாழ்க்கையைச் சொன்னால் எனதருமைக் குருநாதரின் காது குளிரும். நீங்கள் எப்போதும் உங்கள் வாழ்க்கையை பிறரிடம் சொல்லுங்கள் என்று என் குருநாதர் எனக்குக் கடிதம் எழுதினார். நான் என்னைப்பற்றி பேசுவதைத் தவிர பிறரைப்பற்றிப் பேசுவதில்லை. ஏனெனில் எனக்குள்ளே அனைத்தையும் காண ஆவலுடையவன்.

என் குடும்பம் பெரிதல்ல. எனக்குத் தாய் இல்லை. சகோதரர்களும் இல்லை. தந்தையும் மறுகுடும்பம் உண்டாக்கிக்கொண்டு என்னை விட்டுப் பிரிந்து விட்டார். எனக்கும் என் மனைவிக்கும் கல்யாணமாகி 15 வருட காலத்திற்கு ஒரேயொரு பெண்குழந்தை

---

முற்பக்கத்தொடர்ச்சி

*மன்றுளே திருக்கூத்தாடி*
*அடியவர் மனைகள் தோறும்*
*சென்றவர் நிலைமை காட்டும்*
*தேவர்தம் தேவர் தாமும்*
*வென்ற ஐம்புலனால் மிக்கீர்*
*விருப்புடன் இருக்க நம்மால்*
*என்றுமிவ் விளமை நீங்காது*
*என்றெழுந் தருளினாரே!* —பெரியபுராணம்

திருத்தொண்டர் வரலாறுகளைத் தித்திக்கும் செந்தமிழில் பாடி அளித்த சேக்கிழாரை ஊக்கியது எது? உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரிய நடராஜப்பெருமான் மலர்ச் சிலம்படியேதான்.

(சிதம்பரம் கும்பாபிஷேக மலர்)

பிறந்து $4\frac{1}{2}$ வயது வரை வாழ்ந்தது, பிறகு அதுவும் பரலோகம் சென்றுவிட்டது. என் குடும்பத்தில் ஆணுக்கு நான் பெண்ணுக்கு என் மனைவி அவ்வளவுதான், எனக்குப் பூர்வீக சொந்த ஊர் இல்லை. வீடுவாசல் இல்லை, காணிகரை இல்லை, சேர்த்து வைத்த பொருள் இல்லை. ந்ண்பர்கள் யாரும் இல்லை. நான் நம்பி வாழ்வதற்கு எவரும் எப்பொருளும் கிடைக்காததனால் ஆண்டவனையே எளிதில் நம்பி வாழும் பேறு பெற்றேன்.

யாரையும் நம்பி வாழாதே—அவசியமற்ற தொடர்பு யாரிடத்திலும் வைத்துக்கொள்வதில்லை. காரணம் இல்லாமல் யாருடனும் பேசுவதில்லை, பிறருடைய இன்பத்தை ருசிப்பதில்லை, தன் இருப்பிடம் விட்டு பிறரைப் போய்ப்பார்க்கும் பழக்கம் இல்லை. பிறருடைய உதவியையும் எதிர்பார்த்ததில்லை. பிறக்கும்போதே இல்லை இல்லை என்று சொல்லிக்கொண்டு வந்தவனைப் பார்த்து எனதருமை குருநாதர் உனக்கு உண்டு உண்டு எல்லாம் உண்டு. இந்த உலகமே உன்னுடையதுதான், என்று வாயார வாழ்த்தி மனமார ஆசீர்வதிக்கிறார்.

ஆண்டவன் ஒருவனையே நம்பியிரு-என் இஷ்டதேவியாகிய அன்னை ஆனந்த சரசுவதி என் இருதயத்திற்குள்ளேயே வசிக்கிறாள். எனக்கு உணவும் உடையும் பெருமையுந் தந்து ஆதரிக்கிறாள். நான் விரும்புவதும் எனதருமைக் குருநாதர் விரும்புவதுமான நற்காரியம் அனைத்தையும் எனக்கு சூழ்நிலை மூலம் தந்தருளுகிறாள். என் அன்னை ஆனந்த சரசுவதியே சிவானந்த சரசுவதியுமாக காட்சியளிக்கிறாள். எனக்கும் என் அன்னைக்கும் நடுவில் நிற்கிறார் என் குருநாதர். என் குருநாதரையும் என் அன்னையையும் நினைப்பதற்கும் அவர்களின் திருநாமத்தை ஓதுவதற்கும் அவர்களின் கடைக்கண் நோக்கினால் சீர்பெற்றுவரும் என் வாழ்க்கையை அன்பர்களுக்கு அளித்து மகிழ்வதற்குமே எனக்குக் கிடைக்கும் பொழுது பற்றாமல் இருக்கிறது. நான் சுருக்கமான வாழ்க்கையும் விரிவான வாழ்க்கையும் நடத்துகிறேன். சாதாரண உலகவாழ்க்கை எவ்வளவு குறைவாகச் சுருக்க முடியுமோ அவ்வளவுதூரம் சுருக்கி வாழ்கிறேன். தெய்வீக வாழ்க்கையில் எவ்வளவுதூரம் விரிவான வாழ்க்கை நடத்த முடியுமோ அவ்வளவுதூரம் பெரும் வாழ்க்கை வாழ்கின்றேன்.

# திருமுறைக்காட்சி-13.

(முத்து.)

## என் வாழ் முதலாகிய பொருள்.

தலைவியும் தலைவனும் சோலை ஒன்றிற் சந்தித்தனர். இருவர் உள்ளமும் பொருந்தின. களவுக்காதல் பலரறியும் கடிமணமாயிற்று. தலைவன் பொருள் வயிற் பிரிந்தான். குறிப்பிட்ட தவணையும் கழிந்துவிட்டது. தலைவனைக்காணவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினாள் சுலைவி. கிளியைத் தூதுவிட்டாள்: குயிலைத் தூதுவிட்டாள். திடீரென ஒருநாள் தலைவன் வந்து சேர்ந்துவிட்டான். தலைவியின் மகிழ்வுக்கு ஓர் எல்லையில்லை. தலைவன் நித்திரைக்குச் சென்றவன் நெடுநேரம் தூங்கி விட்டான். அக்கம் பக்கத்திலுள்ளார் தலைவனுடைய வருகை அறிந்து அவனைக் காண்பதற்கு அதிகாலையே வந்துவிட்டனர். தலைவி தலைவனைத் துயிலெழுப்புகின்றாள். இது சாதாரண உலக நிகழ்ச்சி.

மணிவாசகத் தலைவியாரை சிவபிரானாகிய தலைவர் திருப்பெருந்துறையில் யாருமறியாது காதலித்துக் கைப்பிடித்தார். யாதோ காரணம் சொல்லிப் பிரிந்துவிட்டார் கலைவர். தலைவியாரால் பிரிவைத் தாங்கமுடியவில்லை. தலைவரைத் தேடித் தலைவியாரே புறப்பட்டுவிட்டார். உத்தரகோசமங்கையில் தலைவரைச் சந்தித்தார். கிளியைத் தூதனுப்பினார்: குயிலைத் தூதனுப்பினார். சலைவர் அதற்கு மசிந்துகொடுக்கவில்லை தலைவரிடம் தாமாகவே நேரில் சென்றார் அவருடன் கூடிக் குலாவி இன்பமெல்லாம் அநுபவித்தார். இதனை அறிந்த அக்கம்பக்கத்திலுள்ள தலைவியின் தோழியர் தலைவனைக்காண வேண்டுமென்று வந்தனர். நேரம் அதிகாலை. தலைவர் நல்லநித்திரை தலைவருக்கு இசையில் நல்ல விருப்பம் என்பதை தலைவியார் அறிவார். அதுவும் மணிவாசகத் தலைவியார் பாடக்கேட்பதில் தலைவருக்கு கனிப்பட்டதோர் ஆனந்தம். உடனே தலைவரைத் துயிலெழுப்புகின்றார்.

குடும்பப்பெண்கள் துயிலெழுந்ததும் கணவன்பாதங்களை வணங்குதல் அன்றுதொட்டுள்ள மரபு. தலைவிதான் துயிலெழுந்ததும், தலைவன் துயிலெழாவிட்டாலும் தலைவன்பாதத்தை வணங்குதல் மரபு. காலைக்கடன்களை முடித்துவந்து தலைவனைத்துயிலெழுப்பிய பின் இரண்டாம்முறையாக வணங்குதலும் மரபாகும். மணிவாசகத்தலைவியார் தோழியரோடு இருக்கிறார். தலைவர் உள்ளே துயிலுகின்றார். தலைவரை வணங்கியே அவரைத்துயிலெழுப்புதல் வேண்டும். பலர்முன்னிலையில் கணவரை வணங்குவதை பெண்கள் விரும்புவதில்லை. மணிவாசகத்தலைவியார் அதற்கு விலக்கானவரல்ல. தலைவரைத்துயிலெழுப்ப நினைத்தவர் பலநாட்பழக்கத்தால் போலும் முதலில் போற்றி என்று ஆரம்பிக்கின்றார். ஒவ்வொரு பெண்ணும் தம் தலைவர்களுக்கு ஒவ்வொருசெல்லப்பெயர் வைத்திருப்பார். அதுஅவர்களின் அன்பின்சிறத்தைக் காட்டுவதாயமைந்திருக்கும். அச்செல்லப்பெயரும் பலருக்குமுன்னிலையில் சொல்லக் கூசுவார்கள். பலர் முன்னிலையில் தலைவரை அழைக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதற்கும் தனிப்பட்டதோர் முறை வைத்திருப்பார்கள். குழந்தையைக்காட்டி இவனுடைய அப்பாஎன்று கூடக்குறிப்பிடுவார்கள். மணிவாசகத்தலைவியாரும் தமதுதலைவரை என்னென்ன அன்புப்பெயர்களால் அழைத்தாரோ யாரறிவார். தோழியர்முன்னிலையில் நிற்கும்போது "என்வாழ் முதலாகிய பொருளே" என்று குறிப்பிடுகின்றார். தலைவர்மேல் இவருக்கிருக்கும் அன்பைப்புலப்படுத்துவதோடு தோழியர்முன்னிலையில் தலைவருக்குக்கொடுக்கும் மரியாதையும் அவ்வரியில் அமைந்திருப்பதை உணரலாம். எனதுவாழ்விற்குமாத்திரம் முதலாகிய பொருள் அல்ல; என்னைச்சேர்ந்தோர் அத்தனைபேருடைய வாழ்வுக்கும் முதலாகியபொருள் அவரே என்பதைச் சொல்லாமற் சொல்லிஉணரவைக்கின்றார். பருவமடையாத பெண் தனதுவாழ்வுக்கு முதல்துணையாகப் பெற்றாரையோ உற்றாரையோ அன்றி இன்னும் வேறுயார்யாரையோ எல்லாம் நினைத்திருப்பாள். பக்குவமடைந்து கணவனைக்கைப்பிடித்ததும் அவன்தான் தன்வாழ்வின் முதற்பொருள் என்பதை அனுபவத்தாலறிகின்றாள். மணிவாசகத் தலைவியாரும் எம்பெருமானார் திருப்பெருந்துறையில் வந்து ஆட்கொள்ளும்வரை யார்யாரையோஎல்லாம் வாழ்முதலாகிய பொருள்

என்று நினைத்ததுண்டு. திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட பின்பே பெருமானுர் தான் வாழ் முதலாகிய பொருள் என்பதை அநுபவத்தில் அறிந்தார். அதுமாத்திரமன்று: முன்னம் அவனுடைய நாமங் கேட்டு, மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டு, பின்னை அவனுடைய ஆரூர் கேட்டு பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானுர். அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தார்: அகலிடத்தார் ஆசாரத்தை அகன்ருர்: தன்னைமறந்தார்; தன்னுமங்கெட்டார் தலைவனுரது தாளை நங்கையார் தலைப்பட்டார். இதுவே தலைவியாரது நிலையாம்.

தலைவியார் துயிலெழுப்பும் பொழுது தோழியர் உங்களைத் தரிசிக்க வந்திருக்கிருர் என்று எழுப்பவில்லை. 'புலர்ந்தது' என்கிருர். விடிந்துவிட்டது என்கின்ருர். தோழியர்களுடைய இருண்ட வாழ்வும் புலர்ந்து ஒளிபெற்றது என்பது உள்ளுறை பொருளாகும். இன்றுவரை என்னைப் பிரிந்திருந்தபடியால் இருண்டிருந்த எனது வாழ்வும் உத்தரகோசமங்கையிலே விடிந்தது என்பது பொருளாகிறது.

சூரியோதயமாவதற்கு முன்பு உள்ள காலம் பிரம முகூர்த்தமாகும். அந்த நேரத்திலே உமது இரு பாதங்களையும் பூசித்து உமது திருவருளைப் பெற யாசிக்கின்ருேம். நாம் பூசை செய்யும்போது உம்மிடத்துண்டாகும் புன்னகையே எம்மை வாழ்விக்கும் மருந்தாகும்.

''பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்"

தலைவரது திருப்பாதங்களுக்கு அவையே உவமையல்லால் வேறு உவமை கூறமுடியாது. ஆதலால் இணைதுணை என்ருர். பத்தகோடிகள் யாவும் எந்நேரமும் பூவிட்டு அர்ச்சிப்பார்களாதலினுல் பூக்கள் நிரம்பிய கழலாயிற்று. தலைவியாரது இருதயத் தாமரையில் பூசிக்கப்படும் பொருள் இறைவரது திருவடிகளே. அதனுலும் பூங்கழலாயிற்று. இதயத்துள்ள திருவடி களுக்கு அன்புமலர் கொண்டு அர்ச்சிக்கின்ருர். அன்புமலரால் தலைவரைத் தொழுது ஏத்

துகின்றார். எதற்காக? அருளைச் செய்கிற புன்முறுவலை ஏற்றுக் கொள்வதற்காக. இப்படியெல்லாம் உமது திருவடிகளைப் பெற்றுய்வதற்காக உமது திருவடிகளை நாம் எல்லாரும் வணங்கச் சித்தமாயுள்ளோம். தினந்தோறும் தலைவியார் மாத்திரம்தான் தலைவரது பாதங்களை வணங்கி அருள் பெற்றது உண்டு. இன்று தோழியரும் பலர் வந்துள்ளார் என்பதை உணர்த்த 'தொழுகோம்' என்று பன்மையிலே குறிப்பிடுகின்றார்.

முதலில் தமது அன்புரிமையில் வாழ்முதலாகிய பொருளே என்று அழைத்த தலைவியார் சிவபெருமானே என்று எல்லாரும் அழைக்கும் பாவனையில் அழைக்கின்றார். தன்னோடு மாத்திரம் கொண்ட அன்புரிமை பரந்துபட்டு யாவரிடத்தும் செறிந்த தன்மையை இச்செய்தி விளக்குகின்றது. தலைவியாரை ஆண்ட இடம் திருப்பெருந்துறையாதலின் "திருப்பெருந் துறையுறை சிவபெருமானே" என்கின்றார். அத்திருப்பெருந்துறை வயலால் சூழப்பெற்றது. வயல் இருத்தலினால் மக்கள் யாவரும் பசிப்பிணியற்று வாழ்கின்றனர். இதேபோன்று ஆத்மபசியெடுத்தோருக்கும் அங்கு நல்ல விருந்துண்டு. இதனை 'வயல்சூழ் திருப்பெருந்துறை' என்ற தொடரினால் சொல்லாமல் சொல்லி வைக்கின்றார் வயலில் எப்பொழுதும் பச்சையும் தண்ணீரும் உண்டு. அதனால் 'தண்வயல்' என்கின்றார். திருப்பெருந்துறையுறை சிவனாரும் தண்மை நிறைந்தவர் என்பதை விளக்குகின்றார். வயலில் தண்மை எப்பொழுதும் விட்டுநீங்காதிருத்தலினால் கமலங்கள் மலருகின்றன. பல இதழ்களையுடைய கமலங்கள் மலரும்போது பார்க்கத் தனி ஒரு ஆனந்தமாகும் சேற்றிலே முளைத்த கமலம் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. மனச் சேற்றில் மலர்ந்த இதைய தாமரையிலே திருப்பெருந்துறையுறை சிவன் விரும்பிவந்து வீற்றிருப்பான் என்பதை விளங்கவைக்கின்றார்.

தருமத்தை விளக்கும் உயர்ந்த எருதுக்கொடியை உடையவரே என்னை அடிமையாக உடையவரே எமது தலைவரே பள்ளி எழுந்தருளுவீராக. நீர் தருமவான் என்று நினைத்தல்லவா தோழியர்கள் இவ்விடம் வந்துள்ளனர். நான் உமது அடிமைத் தொண்டினள் என்றல்லவா உம்மைக்காண வந்திருக்கின்றனர். நீர் அடியாளுக்கு

மாத்திரமன்று அவர்களுக்கும் தலைவர் என்று கருதியல்லவா வந்திருக்கின்றார்கள். ஆதலால் 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.' மணிவாசகத் தலைவியாரோடு சேர்ந்து நீங்களும் பள்ளியெழுச்சி பாடுங்கள்.

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடிஉடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

எனது வாழ்வுக்குக் காரணமான பொருளே! உனக்கு வணக்கம். இப்போது பொழுது விடிந்துள்ளது. உமது தாமரைப் பூப்போன்ற திருவடிகளுக்கு ஏற்றவையான தமக்குத் தாமே ஒப்பாகிய ஒப்பற்ற பூக்களைக்கொண்டு அர்ச்சித்து அதனால் உமது திருமுகத்தில் உண்டாகும் எமக்கு அருளைச் செய்கிற அழகிய புன்முறுவலை ஏற்றுக் கொண்டு உன் திருவடிகளைத் தொழுவோம். (தொழச் சித்தமாயிருக்கிறோம்.) சேற்றில் வளரும் இதழ்களோடு கூடிய தாமரைப் பூக்கள் மலர்கின்ற குளிர்ந்த வயல்களாற் சூழப்பெற்ற திருப்பெருந் துறையில் உறைகின்ற சிவபெருமானே! உயர்ந்த ஏற்றுக் கொடியை உடையவனே! என்னை ஆண்டுகொண்டவனே! எம்பிரானே! பள்ளியெழுந்தருள்வீராக.

உன்னுடைய திருவடித் தாமரைகளுக்கு ஏற்றவாறு மென்மையும் இனிமையும் நறுமணமும் உடைய பூக்களைக்கொண்டு திருவடிகளை உள்ளன்போடு வணங்கி உன் திருமுகத்தை நோக்குதலும், அதில் தோன்றும் அருள் நிறைந்த புன்முறுவலில் ஈடுபட்டு வேறுபயனைக் கருதாது தொழக் காத்திருக்கிறோம். எழுந்தருள்வீராக, என்கின்றார்.

# அகில உலகத் தமிழ்க் கலை மன்றம்.

(கா. பொ. இரத்தினம், தலைவர், தமிழ்மறைக் கழகம்)

தமிழ் மொழி இப்பொழுது பலதுறைகளிலும் வளர்ந்து வருகிறது. தமிழகத்திலும், தமிழ் மக்கள் தொகையாக வாழும் இலங்கை, மலாயா, பர்மா, தென்னாபிரிக்கா, பீச்சித்தீவு முதலிய பல நாடுகளிலும் நம் மொழியின் ஆக்கங்கருதிப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. வீட்டுமொழியாய் அஃது அடிமைப்பட்டுக்கிடந்த காலம் போய்விட்டது. கல்லூரிகளிலும், ஆட்சி நிலையங்களிலும் ஆலயங்களிலும் அது முதன்மை பெற்று வருகிறது.

பல நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களுடைய பேச்சிலே சில வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவர்களுடைய எழுத்திலே வேறுபாடுகள் இல்லை, என்று கூறத்தக்க நிலையில் இப்பொழுது தமிழ் மொழி விளங்குகிறது. பேச்சிலுள்ள வேறுபாடுகளை வளரவிடாமற்றடுத்து, எழுத்தில் எவ்வித வேறுபாடும் ஏற்படாமற் செய்தாற்றான் இந்த நாடுகள் யாவற்றிலும் இன்றுபோல் என்றும் தமிழ் மொழி ஒரு தன்மையாய் இலங்கும்.

இதனை நிறைவேற்றுவதற்குத் தமிழ் வழங்கும் எல்லா நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களோடும்— சிறப்பாகத் தமிழ் அறிஞர்களோடும்— தொடர்பு கொள்ளத்தக்க முறையில் ஓர் அகில உலகத் தமிழ்க்கலை மன்றம் உடனே அமைக்கப்படவேண்டும். இந்த மன்றத்தின் தலைமை அலுவலகம் தமிழ் நாட்டிலே இருத்தல் நன்று. ஏனைய நாடுகள் ஒவ்வொன்றிலும் கிளை அலுவலகம் நிறுவப்படலாம். இம்மன்றம் அரசியல் தவிர்ந்த ஏனைய துறைகளிலும், சிறப்பாக மொழி, கலை, கலாச்சாரம் முதலிய துறைகளிலும் உலகமெங்கும் வாழுந் தமிழ் மக்களிடையே தொடர்பை ஏற்படுத்தித் தமிழினதும், தமிழினத்தினதும் ஆக்கத்துக்கு உழைத்தல் வேண்டும்.

இதனை நிறுவுவதற்குத் தக்க உரிமையும், ஆற்றலும் சென்னை அரசாங்கத்தாருக்கே உரியதென்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

எனவே, இதனை நிறுவுவதற்கு அவர்கள் முன்வரல்வேண்டும். அவர்கள் முயலாவிடின் தமிழ்நாட்டிலுள்ள செல்வர்களோ, சைவமடங்களோ, அண்ணாமலைப் பல்கலைக்கழகமோ இந்த மன்றத்தைத் தொடங்குதல்வேண்டும். தொடங்கியபின் சென்னை அரசாங்கத்தாருடைய ஆதரவு கிடைக்காமற் போகாது.

இந்த மன்றம் செய்யவேண்டிய பணிகள் பலவுள. இவற்றுள் முதலில் செய்யப்படவேண்டியது கலைச்சொற்கோவை ஒன்றினை அமைத்தலாகும்.

## கலைச் சொற்கோவை

இப்பொழுது தமிழகத்தில் மாத்திரமன்றி இலங்கையிலும் மலாயாவிலும் தமிழிற் பலகலைகளையும் கற்பிக்கத் தொடங்கியுளர். சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரும், சென்னை அரசாங்கத்தாரும் கலைச்சொற்கோவைகளை வெளியிட்டுளர். பௌதிகம், இரசாயனம், கணிதம், பூமிசாத்திரம் என்னுங்கலைகளுக்குரிய சொற்கோவைகளை இலங்கை அரசினர் வெளியிட்டுளர். இக்கலைச்சொற்கோவைகளிற் பல வேறுபாடுகள் உள. உலகிலுள்ள எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளுங் கல்லூரிகளும் கையாளுங் கலைச்சொற்கள் ஒரு தன்மையாகவே அமைதல் வேண்டும். ஆங்கிலம்போன்ற உலக மொழிகளில் இருப்பதுபோற் தமிழ் மொழியிலும் நாடுதோறும் வழங்குங் கலைச்சொற்கள் வேறுபாடற்றனவாய் அமைதல் இன்றியமையாதது. ஒரு நாட்டில் வெளியாகும் தமிழ்ப்பாடநூல்களை ஏனைய நாடுகளும் பயன்படுத்தல் வேண்டும். தமிழ் மொழி பலகிளைகளாகப் பிரிந்து போகாமல் இருத்தற்கும் இஃது இன்றியமையாதது.

இதனை நிறைவேற்றுவதற்கும் முன்னணியில் நின்று உழைக்க வேண்டியவர்கள் சென்னை அரசாங்கத்தினரேயாவர். அகில உலகக் கலைமன்றத்தை அமைத்து அதன்மூலம் பல நாட்டிலுள்ள அறிஞர்களைக் கூட்டித் தமிழ் மக்கள் வாழும் எல்லாநாடுகளுக்கும் பொதுவாக ஒரு கலைச் சொற்கோவையினை அமைக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பணியை நிறைவேற்றுதற்கு வேண்டியனசெய்தல் தமிழ் வளர்க்கும் சங்கங்கள், பத்திரிகைகள் முதலியவற்றின் கடனாகும்

**வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!**

Regd. at the G. P. O. as a News Paper H. D. 59/30(

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்!

வணக்கம். இன்று உங்கள் கையில் சோதி 8-ம் ஆண்டு பத்தாவது சுடர் கிடைக்கின்றது. இம்மாதத்திலிருந்தே 9-ம் ஆண்டுக்குரிய சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும். புரட்டாதி ஐப்பசி ஆகிய இரு மாதங்களுக்கிடையில் ஒன்பதாவது ஆண்டுச் சந்தாவைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். தமிழும் ஆத்மீகமும் வளரத் தாங்கள் செய்ய வேண்டிய முதல் உதவி தங்கள் சந்தாப் பணத்தை உரிய காலத்தில் அனுப்பிவைப்பதே. தங்கள் நண்பர்களையும் புத்தாண்டுச் சந்தாதாரராகச் சேர்த்து உதவி புரிவீர்களானால் சோதியின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும். விலாசமாற்றம் செய்வோர் தயவுசெய்து சந்தா இலக்கத்தையும் பழைய புதிய விலாசங்களையுந் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றோம்.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

---

## மலிவு விற்பனை

யோகி ஶ்ரீ சுத்தானந்த பாரதியார்
அவர்களால் எழுதப்பெற்ற தெளிபொருள் விளக்கத்துடன் கூடிய திருமந்திரவிளக்கம் இரண்டரை ரூபா அடக்கவிலை உள்ளது. தபாற்செலவுட்பட ஒரு ரூபா முப்பத்தைந்து சதத்திற்கு கொடுக்கப்பெறும் வேண்டுவோர்
ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி
என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

Hony. Editor, K. Ramachandra,
Printed & Published by N. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 16-3-56